**REVISED**

செ.வெ.எண்.368 நாள் : 19.6.2007

## செய்தி வெளியீடு

தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் அமைந்துள்ளன. கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நூல் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலும் இந்த ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் தற்சமயம் கீழ்காணும் 5 கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே இயங்கி வருகின்றன.

1. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம்,
2. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை
3. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி
4. தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை
5. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை

பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் 1998 ம் ஆண்டில் முடிவடைந்த நிலையில் அதன் பின்னர் ஊதிய திருத்தம் குறித்து மாநில தொழிற் சங்கங்களுடனான பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் 2001 ம் ஆண்டில் தொழிலாளர்களின் பொதுவான கோரிக்கைகளை சிறப்பு தொழில் தீர்ப்பாயத்தின் பரிசீலனைக்கு தமிழக அரசு அனுப்பி வைத்துள்ளது.

தொழிலாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகள் தீர்ப்பாயத்தில் பரிசீலனையில் உள்ள நிலையில் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் ஆலை அளவிலேயே தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இந் நிலையில் கூட்டுறவு நூற்பாலைகளின் தொழிற் சங்கங்கள் ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை ஆலை நிர்வாகங்களிடம் முன் வைத்து வலியுறுத்தி வருவதனால் அடிக்கடி போராட்டங்களில் ஈடுபடுவதனால், ஆலைகளில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஏற்கனவே நலிவுற்ற நிலையில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மேலும் நலிவடைவதனை தவிர்க்கும் வண்ணம் இந்த பிரச்சனைகளில் சுமுகமான தீர்வு காணும் பொருட்டு மத்திய தொழிற்சங்கங்கள் ஆலை நிர்வாகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் முன்னிலையில்

கலந்தாலோசனைக் கூட்டமானது 19.06.2007 அன்று காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலத்தில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் கீழ் காணும் மாநில அளவிலான தொழிற் சங்கங்கள் பங்கேற்றன.

1. பொது செயலாளர், தொழிளலாளர் முன்னேற்ற சங்கம், (LPF)
2. இந்திய தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு. ( CITU)
3. இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் (INTUC)
4. அனைத்திந்திய தொழிற் சங்க காங்கிரஸ் ( AITUC)
5. தாயகம் திரும்பியோர் கூட்டமைப்பு முன்னணி (UFFR)
6. அண்ணா தொழிற் சங்கம் (ATP)
7. மறுமலச்சி தொழிலாளர் முன்னணி (MLF)

கலந்தாலோசனைக் கூட்டத்தில் கீழ்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டுறவு நுற்பாலைத் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் வேலைப்பளு குறித்து தொழிற் சங்கங்களுடன் கலந்து ஆலோசித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க கீழ்கண்ட குழு அமைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் | – | தலைவர் |
| 2. இணை இயக்குநர் (துணிநூல்) | – | கூட்டுநர் |
| 3. கூடுதல் இயக்குநர் (பிபிஇ) | – | உறுப்பினர் |
| 4. இணை இயக்குநர் (கைத்தறி) | – | உறுப்பினர் |
| 5. ஆலை மேலாளர்,<br>அண்ணா கூட்டுறவு நூற்பாலை | – | உறுப்பினர் |

மேற்கண்ட குழு 31.10.2007 க்குள் தங்களது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கும்.

செயலாளர்/கை.கை.து(ம) கதர் துறை

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.**